**செய்தி வெளியீடு எண்:183** **நாள் : 27.04.2015**

**செய்தி வெளியீடு**

மைய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகாரத்துறை அமைச்சகத்தின் 8.4.2015 நாளிட்ட ஆணையில், வெளிநாட்டு வேலைவாய்ப்பினை அளிக்கும் நிறுவனங்களான தமிழக அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் மற்றும் கேரள அரசின் NORKA Roots மற்றும் Overseas Development and Employment Promotion Consultants (ODEPC) ஆகிய அரசு நிறுவனங்கள் மட்டும் செவிலியர்களை ஐக்கிய அரபு குடியரசு, சவூதி அரேபியா, கத்தார், ஓமன், குவைத், பக்ரைன், மலேசியா, லிபியா, ஜோர்டான், ஏமன், சூடான், ஆப்கனிஸ்தான், இந்தோனேசியா, சிரியா, லெபனான், தாய்லாந்து மற்றும் ஈராக் போன்ற 18 நாடுகளுக்கு 30.4.2015 முதல் வேலைவாய்ப்பினை அளிப்பதற்கு ஆணையிட்டுள்ளது.

எனவே, வெளிநாட்டு வேலைவாய்ப்பினை நாடும் செவிலியர்கள் தமிழக அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் உடனடியாகப் பதிவு செய்து எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வெளிநாட்டு வேலைவாய்ப்பினை நாடும் செவிலியர்களுக்கான பதிவு கட்டண விவரம் www.omcmanpower.com என்ற இந்நிறுவன இணையதளத்தில் அறியலாம். மேலும் விவரங்களுக்கு, 044-22502267/ 22505886/08220634389 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம்.

**நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**
**சென்னை**

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**